திராவிடநாடு

16—3—58 | வார வெளியீடு | விலை 16 காசு

பாராண்ட பைந்தமிழா!

—[கலைவாணன்]—

பாராண்ட வழிவந்த பைந்தமிழா—கலை
பாயுந் தமிழ்தந்த தண்டமிழா (....)

சீரான மண்ணிதிலே மாறான வேற்றுமைகள்
சீரிழந்தே மாற்றார் செய்வதை அறியாயோ? (....)

அரசென்று லதனெழிலை நீயறியாதானோ?
அணுவேனும் வழுவாத காப்பல்லவோ சொல்?
அறநெறி மாறியாட்சி நோக்கிடுவோர் கையில்
அரசுண்டு யெனலாலே அழுக்கிட லழகோ சொல்? (....)

பீகாரு முத்திரமும் மத்திய மாகாணம்
பிறகேது யிவையன்றி இந்திதானுறைவது?
ஏகமா யெம்மொழியை ஆட்சிமொழி செய்வோம்—
என்றிடு மாட்சியாளர் ஏற்றவரோ நீசொல்? (....)

வடக்கென்றும் தெற்கென்றும் பேதமேன் நமக்கென்பார்!
வகுத்திடுந்திட்டத்தில் வஞ்சனையே செய்வார்!
இடக்காகப் பற்பலவும் இன்னல்களே செய்தால்
இவரைநாம் நம்பியின்னும் வாழ்ந்திடலாமோ சொல்? (....)

கோடிப்பொன் குவித்தாலு மினிச் சகியோம்;
கோமானாய் வாழ்ந்தவர் வாழ்வறிவோம்!
கொடியேற்றி வாழ்ந்திடுவோம்!குறளாட்சி வளர்த்திடுவோம்!
கோதை தமிழ்த்தாயைக் நாளும்பணிந்திடுவோம்!! (....)

விரைவில் உருவாகிறது!
தென்னகத்துத்திரை வானில்
மின்னவரும் வண்ணத்தாரகை
பாண்டித் தேவன்
மோராக் ~ ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ் தயாரிப்பு
திரைக்கதை • டைரக்ஷன்
K. சுப்ரமண்யம் B.A., B.L
வசனம்
முகவை இராஜமாணிக்கம்
பூரண உரிமையாளர்கள்...
ஸ்ரீனிவாஸ் பிலிம்ஸ் 15 முதல் மெயின் ரோடு, காந்திநகர், சென்னை-20.

முழக்கம் கேட்கிறது!

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [16-3-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 35

நம் குரல் எங்கெங்கெல்லாம் எட்டவேண்டும் என்று நினைக்கிறோமோ, அங்கெல்லாம் எட்டி வருகிறது, என்பதற்கான சான்றுகள் அடிக்கடி கிடைத்து வருகின்றன.

இந்தியத்துணைக் கண்டத்துத் தலைநகரிலிருந்து வெளிவரும் 'தாட்' என்னும் ஆங்கில வார ஏட்டில், 1-3-58 இதழில், தீட்டப்பட்டிருக்கிறது.

"இந்தியா என்பது ஒரு பெரிய பிராணி என்றால், அதனுடைய தலையும் உடலும் வடக்கே இருக்கின்ற மாநிலங்கள். தெற்கே இருக்கின்றவை, அந்தப் பிராணியின் வால் போன்றவை. அந்தப் பிராணியின் தலையும் உடலும் பருத்திருக்கின்றன! ஆனால் வால் மட்டும் நோஞ்சலாக இருக்கிறது."

இந்தப் படப்பிடிப்பை எங்கிருந்து நாம் எதிர்பார்க்க முடியாதோ, அங்கிருந்தே காணக் கிடைக்கிறது.

"வடக்கு வாழ்கிறது — தெற்குத் தேய்கிறது" என்று நாம் சொல்வதைக் கேட்டு, வடக்கு வாழவுமில்லை, தெற்குத் தேயவுமில்லை, என்று அங்கலாய்த்திடும் அமைச்சர்கள், மற்றும் பல திறப்பட்ட அகில 'இந்தியா'க்கள், மனதில், டில்லியிலிருந்து வந்திருக்கிற இந்தக் கருத்து பதிய வேண்டியதாகும்.

"தென்னகம் சிறு சிறு மாநிலங்களாகச் சிதறுண்டு கிடப்பதால்தான் வட இந்திய மாநிலங்களோடு போராடிச் சம உரிமையைப் பெற்றிட இயலவில்லை — எனவே சிதறுண்டு இருக்கின்ற மாநிலங்கள் ஒன்று திரட்டப்பட்டு, தட்சிணப் பிரதேசம் என்று நாம் அழைத்திடுவது போன்ற திராவிடநாடு ஏன் அமைக்கப்படக்கூடாது? — என்று அந்தக் கட்டுரை முடிக்கப்பட்டிருக்கிறது.

(Why should they (Southern States) not be welded into a Dravidan State, which we call Dhakshina Pradesh?)

நாம் தட்சிணப் பிரதேசம் என்று சொல்வதும், அவர்கள் திராவிட அரசு என்று கேட்பது மான ஒரு அமைப்பை ஏன், தென்னரசுகள் ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது?— கேட்கிறது, ஏடு!

திராவிட நாட்டுக்கும், தட்சிணப் பிரதேசத்துக்கும் வேற்றுமைகள் உண்டு. எனினும், ஏடு, இப்படியொரு கூட்டமைப்புத் தேவை யென்பதை எடுத்துக் காட்டுவதையே, "அகில இந்தியா"க்கள் உணரவேண்டும்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள வேறுபாட்டினை விளக்கிடுவதற்கு உயிருள்ள பிராணியொன்றை 'இந்தியா'வாக உருவகப்படுத்துகிறது, அந்த ஏடு!!

அது உயிருள்ள பிராணியா—அல்லது, வைக்கோலும் குப்பைக் கூளங்களும் செருகப்பட்டு, தோட்டத்திலே வைக்கப்பட்டிருக்கும், சோளக் கொல்லை பொம்மையா என்பது வரலாற்றைப் படித்திருக்கின்ற அனைவருக்குமே எளிதில் புரிந்திடக்கூடும்!!

இந்த உண்மையை நாம் மட்டுமே சொல்லிக் கொண்டிருந்தால் போதாதென்று கருதியோ, என்னவோ, மீராபென் என்னும் அம்மையார் ஒரு கட்டுரையில் விளக்கிக் காட்டியிருக்கிறார்கள், சென்ற கிழமை.

அந்த அம்மையார் காந்தியாரின் கொள்கையைப் பின்பற்றி வாழ்க்கை நடாத்துபவர்! காந்தியடிகளின் பாதையில் செல்பவர்!!

உள்ளத்தில் தோன்றியதை, தயவு தாட்சண்யத்திற்குக் கட்டுப்படாமல், எடுத்துரைத்திருக்கிறார்.

அவரது கட்டுரை "சுயராஜ்யா" 2-3-58 இதழில் வெளியாகியுள்ளது.

"வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியாவிற்குப் போவது ஒரு புதிய உலகத்தில் நுழைவதைப் போலவே இருக்கிறது... ......ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து நாடு விடுபட முயன்று கொண்டிருந்தபோது, 'இந்தியா ஒன்று' என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லவேண்டும் என்ற ஆசை இயற்கையாகவே எழுந்தது. ஆனால் அந்த ஆசையை வடநாடு இன்று அளவுக்கு மீறி வளர்த்துக்கொண்டிருக்கிறது."

'இந்திய ஒற்றுமை' பற்றி அந்த அம்மையார் தந்திடும் விளக்கம் இது!!

[பிரிவினை கீதம்!—பல்வேறு உருவில், கேட்கிறது. டில்லி, "தாட்" ஏடு, யோசனை தருகிறது. மீராபென் அம்மையார், கட்டுரை எழுதுகிறார். இதெல்லாம் எதைக் காட்டுகிறது? முழக்கம் வலுக்கிறது! போட்ட விதை, முளைக்காது போகவில்லை —முளைத்து, ஆல்போல் தழைத்து வருகிறது என்பதைத்தானே!!]

★

கேட்டீரா! சேதி!

டில்லி, பல சாம்ராஜ்யங்களின் சமாதி! என்று சொல்லப்படுவதுண்டு. டில்லியின் சரித்திரத்தைக் கொஞ்சம் புரட்டினால், யாவரும் இதை அறியலாம். ஏன்? கொடி கட்டி ஆண்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குக்கூட அங்கு தானே சமாதி எழுப்பப்பட்டது! அந்த மயான பூமியில் நமது 'தர்பாரும்' இருக்கிறதே-இது என்னவாகுமோ—எனும் அச்சமோ, என்னவோ தெரியவில்லை; பார்லிமெண்டில் காளிகாசிவ் எனும் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்:- இந்தியாவின் தலைநகரமாக டில்லியிருப்பதை மாற்றி, சாரநாத்துக்குக் கொண்டு போக வேண்டுமென்று.

✱

தலைநகரமான டில்லிக்கு வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் தங்க வசதி செய்யும் பொருட்டு சர்க்காரே, "அசோகா ஓட்டல்" எனும் பெயரில் ஒரு ஓட்டல் நடத்தி வருகிறதல்லவா? அது எதிர்பார்த்ததைவிட அதிக நஷ்டத்தில் இயங்கி வருகிறதாம்! அதனால், பல ஏடுகளிலும், விளம்பரம் போடுகிறார்கள், அடிக்கடி. அப்படியாவது கூட்டம் வராதா எனும் ஆசையில்.

✱

முந்த்ரா விவகாரத்தின் விளைவாக டில்லியே கலகலத்திருக்கிறதல்லவா! இதே நேரத்தில், மேற்கு வங்க சட்டசபையிலும், இலஞ்ச ஊழல் பற்றிய பல ரசமான தகவல்கள் வெளியாகியுள்ளன. காங்கிரஸ் தூணகளில் ஒருவரும், முதலமைச்சராக இருப்பவருமான டாக்டர் பி. சி. ராய் ஒரு ஜமீன்தாரருக்குச் சலுகைகள் செய்துவிட்டு, அதற்குப் பதிலாகப் பல ஏக்கர் நிலங்களைக் குறைந்த விலைக்குச் சொந்தமாக்கிக் கொண்டுள்ளாராம். இதை வெளியிட்டு, "இது பற்றி ஒரு நீதி மன்ற விசாரணை நடத்த முடியுமா?", என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கேட்டிருக்கின்றனர். பி. சி. ராய், ஒரே வரியில் "நடத்த முடியாது", என்று பதிலளித்துவிட்டார். டி. டி. கே. கதி வந்துவிட்டால் என்ன செய்வது!!

✱

பி. சி. ராய் விஷயம் இப்படியென்றால், பிரபல கம்யூனிஸ்டுத் தலைவர் அம்பிகா சக்கரவர்த்தி ரூபாய் பத்து லட்சம் பணத்தைக் கையாடினாராம்! ஒரு உறுப்பினர், வெளியிட்டுள்ளார்!! அகதி நிவாரண வேலைகளில் தீவிரமாக ஈடுபடுவதாகக் காட்டி, ஒரு பெரிய அதிகாரியொருவருடன் சேர்ந்து கொண்டு, இவ்வளவு பணத்தையும் ஏப்பம் விட்டதாக அவர் பேசியுள்ளார்.

✱

ஸ்வீடன் நாட்டுத் தூதுவரான திருமதி ஆல்வா மிர்டால் என்பவர் மார்ச் 4ந் தேதி திருவனந்தபுரத்தில் பேசும்போது, "இங்கே பஞ்சாயத்துக்கள் இருக்கின்றனவே, இதைப் போல எங்கள் நாட்டிலும் 'கிராமக் கவுன்சில்கள்' உள்ளன. நாட்டை நிர்வகிப்பது, இந்தக் கவுன்சில்தான். ஸ்வீடிஷ் சர்க்கார், சில கொள்கைகளை மட்டுமே வகுக்கும். அந்தக் கொள்கைகளை அமுல் நடத்தும் அத்தனை பொறுப்பும் இந்தக் கவுன்சில்கள் வசமே உள்ளன. எங்கள் நாட்டில் சர்க்காரைவிட, இவைகளுக்குத்தான் பொறுப்பும் வேலையும் அதிகம்", என்று பேசியுள்ளார். ஸ்வீடனா, நாம் வாழும் நாடு! இங்குதான், "இரண்டு எஜமானர்கள்" இருக்கிறார்களே நமக்கு — மாகாண சர்க்கார் என்று ஒன்றும், மத்திய சர்க்கார் என்று இன்னொன்றுமாக. இங்கே, யார் கொள்கையை வகுத்தாலும், நிறைவேற்றும் பொறுப்பும் அதிகாரமும் டில்லியிடம்தானே இருக்கிறது!!

✱

டில்லி பார்லிமெண்டில் ஒருவர் அரியதொரு யோசனையை வெளியிட்டிருக்கிறார். இரயிலுக்கு டிக்கட் வாங்கும் ஒவ்வொரு பிரயாணியும் தமது உயிரை "இன்ஷியூர்" செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத்த வேண்டுமென்பதே அந்த யோசனை! அடிக்கடி, விபத்துக்கள் ஏற்படுகின்றனவல்லவா? அதனால் எத்தனை குடும்பங்கள், ஆதரவற்று நிற்கின்றன—எத்தனை இல்லங்கள் கணவனும் காப்பவருமற்று நிற்கின்றன. இதைத் தடுக்கவே இந்த யோசனையை வெளியிட்டிருக்கிறார். காங்கிரஸ் அரசில் இரயில் பிரயாணம் என்பது அவ்வளவு தூரம் பயப்படவேண்டிய ஒன்றாகிவிட்டது. இந்த யோசனையை வெளியிட்ட உறுப்பினர், மாற்றுக் கட்சியினரோ என்று நினைப்பீர்கள்; அல்ல அல்ல! காங்கிரஸ் கட்சியேதான்!

✱

"ஐந்தாண்டுத் திட்டங்கள் முன்யோசனையின்றிப் போடப்பட்டு, வற்புறுத்தப்படுகின்றன, நிலைமையை அனுசரித்தே போடப்பட வேண்டும், என்று நான் எவ்வளவு வலியுறுத்தி வந்தும் என் கருத்து ஏற்கப்படவில்லை. திட்டத்தை நிறைவேற்றுகிற இப்போது, நான் சொன்னது சரியென்பது, விளங்கிவருகிறது. இருந்தும், பிடிவாதமும், நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்கும் தன்மையும் காணப்படவில்லை. எனவே, நான் திட்டக்குழுவில், மேலும் இருந்து என்ன பிரயோசனம்? ஆகவே, இதைவிட்டு, விலகிக் கொள்கிறேன்" என்று திட்டக்குழு உறுப்பினர்களில் ஒருவரான கே. சி. நியோகி பிப்: 26-ந் தேதி தன் விலகல் கடிதத்தை அனுப்பியிருக்கிறார்! பட்ட பிறகாவது புத்திவரவேண்டாமா? அது வரவில்லையே, என்று வருத்தம் தெரிவித்திருக்கிறார் அவர்!!

★

"பதில் தர இயலாத" கட்டம்!

ஆதாரங்களுடன்தான் வந்திருக்கிறேன் — அண்ணாதுரை பேசாவிடினும்கூடப்பேசுவதுஎன்கிற முன்னேற்பாடுகளுடன் வந்திருக்கிறேன்-என்று தொண்டையைக் கனைத்துக்கொண்டு, சட்டசபையிலே பேச ஆரம்பித்தார் தோழர் சி. சுப்ரமணியம்! நிதிக்கும் மதிக்கும் அமைச்சராக இருப்பதால், ஏதேதோ புள்ளி விபரங்களை அள்ளி எறியப்போகிறார், சரித ஆதாரங்களைக் காட்டி மறுக்கப் போகிறார், என்றே நாம் எதிர்பார்த்தோம் — காங்கிரசார்கூட, "தி. மு. க.வுக்கு சி. எஸ். சமாதி கட்டப்போகிறார்", எனும் களிப்புடனேயே தென்பட்டனர், அவர், இதுபற்றிப் பேசப்போவதாக அறிவித்தபோது!!

பேசினார்; சட்டசபைக் கட்சிக்கு அவர்தான் தலைவர் என்பதால் விடாமல் பேசினார்; அவருக்குப் பிறகு சபையில் யாரும் பேச முடியாதென்பதால் பேசுவேனென்று பேசினார்; அவர் பேசுகிறபோது இடைமறித்தோ — கேள்வித்தாள்கள் கொடுத்தோ- எவரும் 'தொல்லை' தரமாட்டார்கள் என்கிற தைரியத்தைச் சட்டசபைத் தலைவர் தருவார் எனும் உறுதியிருப்பதால், விடேன் விடேன் என்று பேசினார்; "தொண்டை கட்டிவிட்டது, இல்லாவிடில் இன்னும் பேசுவேன்" என்று சோகத்துடன் சொல்லிக்கொண்டே பேசியபடி உட்காந்தார்! அவர் பேசியபோது, காங்கிரஸ் உறுப்பினர்கள், உற்சாக மூட்டினர் — கைதட்டினர்— மேசைகளைத் தட்டினர்—அண்ணாதுரை எழுதிய நூலிலிருந்தே எடுத்தெடுத்து வீசுகிறாரே என்ற எண்ணமோ, அல்லது நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம், நமது மனதைப் புண்படுத்திட இதைவிட வேறிடம் ஏது என்கிற நோக்கமோ—ஆர்வமும், அதை வெளியிட ஆரவாரமும் காட்டினர்!!

அரங்கண்ணல்

ஆனால், அவர்களனைவரும் ஒன்றை மறந்தனர் — அவர்களென்ன, அமைச்சர் சுப்ரமணியமே அதை மறந்தார். தூற்றுவதற்கும், துணிவுடன் வாதிடுவதற்கும் உள்ள வித்தியாசம் அதிகம்! தூற்றல் எளிது—வாதிடுதல் கடினம். ஏடா, மூடா என்று ஏசுவது எளிது. இது தீது, இது நல்லது என்று ஆதாரம் காட்டி எடுத்துரைப்பது கடினம். அமைச்சர், பேசப்போகிறேன் என்று ஆரம்பித்தபோது,— அண்ணாதுரை கூற்றுக்குப் பதிலளிக்கப்போகிறேன் என்று நெஞ்சை நிமிர்த்திக் காட்டி நின்றபோது — நாம் எதிர்பார்த்தது வேறு! கிடைத்ததோ, பழங்கஞ்சி- அதிலும் கேட்டுக்கேட்டுப் புளித்துப்போன சங்கதி'!

மெச்சினார்

அண்ணாதுரை பேசும்போது, என்ன சொன்னார்? அடா பாவிகளா! அக்கிரமக்காரர்களா! அமைச்சர்களாக வருவதற்கு என்ன தகுதியிருக்கிறது உங்களுக்கு? ஆளத் தெரிகிறதா! வரியைவாங்கிச் சுருட்டிக்கொண்டு போகிறீர்களே!! — என்று இப்படியா பேசினார், அண்ணாதுரை. அல்ல, அல்ல; கண்ணியமாக, அமைச்சரைப் பாராட்டவே செய்தார்! உள்ளத்தில்பட்டதை, தெள்ளத் தெளிய எடுத்துச் சொன்னார் —பட்டியல் போட்டு வரவு செலவைச் செய்திருக்கிறீர்கள்; பாராட்டுகிறேன். இப்போதுள்ள நிதி நிலைமையில், இதைவிடத் திறமையாக ஒரு நிதி நிலை அறிக்கை தயாரிக்க முடியாது— அதற்காக நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும், என்றார். ஏன் அப்படிச் சொன்னார்? ஏதாவது 'பெர்மிட்' கேட்கலாம், மந்திரி சபையைப் பாராட்டிவிட்டு, சொந்தச் சலுகைகள் பெறலாம், என்கிற ஆசையாலா!! அல்ல, அல்ல. உண்மையாகவே, இப்போதுள்ள நிலைமையில் காங்கிரசாட்சி அல்ல, வேறொரு ஆட்சியே நடைபெறினும்கூட இப்படித்தான் ஒரு நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க முடியும். ஏனெனில்; மாநிலத்துக்குக் கிடைக்கும் வருமானங்கள் குறைவு! இதை, அன்றுமுதல், எடுத்துச்சொல்லி வருகிறது தி. மு. க. மாநிலத்துக்கு, நிலவரி, விற்பனைவரி என்கிற இரண்டும்தான் முக்கியமாக வருமானம் தரும் இனங்களாகும். சுங்கம், கலால்; வருமான வரி, தொழில் வளர்ச்சி போன்ற பெரும் பெரும் வரியினங்கள் எல்லாம் டில்லிக்குப் போய்விடுகின்றன. இதுவும், நாம் புதிதாகக் கண்டுபிடித்ததல்ல; நீண்ட நாட்களாகச் சொல்லிவரு

வதுதான். இப்படிப் பெரும் பெரும் வரியினங்களை அங்கே கொடுத்துவிட்டு, நாம் இருப்பதை வைத்துச் சமாளிக்க முயற்சிக்கிறோம், அப்படிச் சமாளிப்பதில், சிந்தாமல் சிதறாமல், சிக்கனமாக இருப்பதைக்கொண்டு முயற்சித்திருக்கிறார் நிதியமைச்சர் என்று மெச்சினார்!!

வழி சொன்னார்

"நீண்ட நாட்களாக என். ஜி. ஓ.க்கள் நிவாரணம் கேட்கின்றனர். அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கக்கூட இந்தச் சர்க்காரால் முடியவில்லை......," என்று அவர் குறிப்பிடும்போது, நிதியமைச்சர் குறுக்கிட்டு, "கொடுக்கலாம்! கல்வி போன்றவைகளுக்கு ஆகும் செலவைக் குறைத்து, இவர்களுக்கு அதிகச் சம்பளம் தரலாம்!!", என்றார். அதைக் கேட்டபோதுதான், சி. என். ஏ, சொன்னார், "இந்தச் செலவைக் குறைத்தால் அந்தச் செலவைச் செய்யலாம் என்கிறார் அமைச்சர். தி. மு. க. அப்படிச் சொல்லவில்லை. ஏனெனில், கல்வி போன்ற துறைகளுக்கு இந்தச் சர்க்கார் செய்கிற செலவு போதுமானதென்று நாங்கள் கருதவில்லை. ஒவ்வொரு துறைக்கும், இன்னும் ஏராளமாகச் செலவு செய்யவேண்டிய நிலைமைதான் உள்ளது. அப்படி அதிகமாகவும் செலவழிக்கப்படவேண்டும் — அதே சமயம் என். ஜி. ஓ-க்கள் போன்றோரின் குறைகளும் நிவர்த்திக்கப்படவேண்டும். அதைத்தான் தி. மு. க. விரும்புகிறது", என்றார்.

*

பணமோ இல்லை! செலவோ அதிகரிக்கப்பட வேண்டும்!! எப்படி இது சாத்தியம்? வரி போட்டால்தான் முடியும்! வரி போடவேண்டுமென்றால் நிலத்தின் மீதும், விற்பனையாகும் பொருள்களின் மீதும்தான் போடமுடியும். இந்த இரண்டு துறைகளிலும் இன்னும் வரி போட்டால், மக்களால் கட்டமுடியாது; வரியும் கிட்டாது. ஆகவே, வரி போடுவதை மட்டுமே அரசு முக்கியமாகக் கருதாது, வருமானம் வரக்கூடிய இதர வழிகளையும் தேடவேண்டும், என்றார்! சினிமா போன்றவைகள் மூலம் அதிக வருமானம் அரசுக்குக் கிடைக்குமென்றால், சினிமாக்களையே ஏற்றுச் சர்க்கார் நடத்தட்டும் — நான் இலவசமாகக் கதை எழுதித் தருகிறேன், என்றும் சொன்னார்! இந்த அரசு, கெட்டுக் குட்டிச்சுவராக வேண்டுமெனும் கெடுமதியிருந்தால், இப்போது அரசு, சினிமாவுக்குப் போட்டிருக்கும் கேளிக்கை வரியினையுமன்றோ கண்டிக்கவேண்டும்? நமக்குத் தானே சினிமாக் கலையின் தொடர்பும், வருவாயும் அதிகம்! இருந்தும், இந்த மாநில அரசுக்குப் பணம் வருகிற சிக்கலில்லாத ஒரு வழி என்பதால், அதை தி. மு. க. எதிர்க்கவில்லை!!

அந்த நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே, மாநிலத்தின் வருமானம் அதிகமாகும் வழிகளைச் சொன்னார்.

மத்ய சர்க்கார் பணம் தருமோ— என்று ஏங்கி நிற்கிறீர்கள்.

பணம் கிடைக்காதபோது பரதவிக்கிறீர்கள்.

இப்போது விவசாய வருமான வரி போடப்போவதாகச் சொல்கிறீர்கள். பணம், ஒரு சிலரிடம் சேராமல் தடுப்பது, நல்லதுதான். ஆனால், இந்த வரி மூலம், 70 லட்ச ரூபாய் தானே கிடைக்கும் என்று திகைக்கிறீர்கள்!!

புதிய வரி போடும் இனங்களும் உங்களிடம் இல்லை — டில்லியைப் பார்த்துக் கேட்டாலும், அதிகப் பணம் கிடைக்குமெனும் நம்பிக்கையுமில்லை!!

இப்படி, எத்தனை நாளைக்குத்தான், இருப்பதைக் கொண்டு சரிக்கட்டிய வண்ணம் — ஒரு பக்கம், என். ஜி. ஓ-க்கள் தவிக்க, இன்னொரு பக்கம் மின்சாரத் தொழிலாளர்கள் துயருற, வேறோர் பக்கமிருந்து நீர்ப்பாசனத் திட்டங்களைப் போட்டுக் கொடு என்றொருவர் குரலெழுப்ப, டில்லியைப் பார்த்து ஏங்கி நிற்க, டில்லி இல்லை என்றதும் தவிக்க; இந்த நிலைமை எத்தனை நாளைக்குத்தான் நீடிக்க முடியும்? என்று கேட்டார்! இந்த நிலைமை மாறி அதிக வருமானங்கள் பெற்று, நாடு வாழ வேண்டுமானால் என்ன செய்யலாம் — என்று கேட்கிறீர்களா!

ஒரே வழி — நாங்கள் சொல்லும் வழி — திராவிட நாடு தனி நாடு ஆவதுதான்!

அப்போது, டில்லிக்குப் போகும் கோடிக்கணக்கான ரூபாய்களை நாமே அனுபவிக்க முடியும்.

பணமில்லை! — என்று பரதவிக்க வேண்டிய அவசியம் இருக்காது.

என்றார். காரசாரமாக, அண்ணாதுரைக்குப் பதிலளிக்கப் போகிறேன் என்றெழுந்த நிதியமைச்சர், இதற்குப் பதிலிறுத்தாரா? இல்லை! இல்லை! மத்ய சர்க்காரை நாங்கள் எதிர்பார்க்கவில்லையென்றோ—நமது வருமான இனங்கள் எல்லாம் டில்லிக்குப் போகவில்லையென்றோ—எப்படி மறுக்க முடியும் அவர்? உண்மைதானே, அவை! உண்மையைத்தானே, தி. மு. க. பேசி வருகிறது!!

சான்று தந்தார்

"திராவிட நாடு எப்படி வாழ முடியும்? சின்ன நாடுகள் வாழ முடியுமா!" என்று கேட்கிறார்களல்லவா, அமைச்சர்கள், அதனால் சி. என். ஏ. ஆதாரம் சொன்னார். வேறு யாருமல்ல; யாரை இந்திய உபகண்டத்தின் உயிர்நாடி என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனரோ, அந்தப் பண்டித நேரு அவர்கள் சொன்ன ஆதாரம்தான், அது. கடந்த ஜூலையில், அவர் ஐரோப்பிய சுற்றுப் பிரயாணம் செய்தபோது, 'இரேக்' எனும் நகரில், "ஒரு நாட்டின் முக்கியத்துவம் அந்த நாட்டின் மக்கள் தொகையையோ அல்லது சிறிதா—பெரிதா என்பதையோ பொறுத்ததல்ல. அங்கு வாழும் மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைத்தான் பொறுத்தது" என்பதாகப் பேசினார். அதைச் சுட்டிக்காட்டி 'அவ்வளவு' பெரியவரே இப்படிச் சொல்லியிருக்கிறபோது, ஒருநாடு பெரிதாயிருந்தால்தான் வாழ முடியு

மெனக் கூறுவது எப்படிப் பொருந்தும் என்று கேட்டார். எங்கே சொன்னார் எங்கள் நேரு? என்றோ; நேரு சொன்னது தவறு என்றோ; மார்தட்டிக் கொண்டு பேச நின்ற நிதியமைச்சர் மறுத்திருக்க வேண்டுமென்றோ—இல்லை! இல்லை!!

"எப்படித் தனியாக நாம் வாழ முடியும்? வெளிநாடுகளிலிருந்து டாலர் போன்ற பைகள் நமக்குத் தேவைப்பட்டால் எங்கே போவது? என்ன செய்வது?", என்று இன்று போல நிதிநிலை அறிக்கைக்குப் பதிலளிக்கும் போது, இதே நிதியமைச்சர் கேட்டார், கடந்த ஆண்டு. அதைக் கவனத்துக்கு கொண்டு வந்து சி. என். ஏ. சொன்னார், இதோ நான் தருகிறேன் பட்டியல், என்பதாக!

தோல்
காப்பி
தேயிலை
மிளகு
நறுமணப் பொருள்கள்
முந்திரி
தோரியம்
பாக்சைட்

போன்றவைகள், இங்குதானே கிடைக்கின்றன! இவைகளைக் கொண்டு வெளிநாட்டு வாணிபத்தை வளப்படுத்தவா இயலாது? ஆஸ்திரேலியா, கேவலம் என்று கருதப்படும் இறைச்சியை 'டின்'களில் வெளி நாடுகளுக்கு அனுப்பி, ஏராளமான பணத்தைக் குவிக்கும்போது, முப்பக்கமும் கடல் சூழ்ந்த நமது நாட்டில் மீன் பிடிக்கும் தொழிலை ஏற்று நடத்தினால் எவ்வளவோ செல்வத்தைப் பெறலாமே என்று சொன்னார்! தனி இனம் — தனி நாடு என்றால் கோபிக்கிறீர்களே, உங்கள் நாமக்கல் கவிஞர் எழுதியிருக்கிறாரே, "தமிழன் என்றோர் இனமுண்டு; தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்று. அதையாவது நீங்கள் எண்ணிப் பார்க்கலாகாதா, என்று கேட்டார்!! திட்டக்குழுத் தலைவர் கே. சந்தானம் பக்ராநங்கல் போன்று வடக்கேயிருக்கும் பெரிய பெரிய திட்டங்களால் அங்கங்கேயிருக்கும் பகுதிகளுக்குத்தான் இலாபமே ஒழிய, மொத்த இந்தியாவுக்கும் பலன் கிடைக்காது, என்று சுட்டிக்காட்டியிருப்பதை எடுத்துக்காட்டி, வடக்கே இதுபோலப் பெரும் பெரும் திட்டங்கள் பல உண்டு! தெற்கே அப்படி ஏதேனும் இருக்கிறதா?—என்று கேட்டார்.

1935-ம் ஆண்டிலே, வெள்ளையனைப் பார்த்து, இப்போது டில்லியில் பெரிய மந்திரியாயிருக்கும் ஜி. பி. பந்த் முழக்கமிட்டார்—"வெள்ளைக்காரர்களே, நீங்கள் வெளியே போங்கள்! எங்களுக்கு சுயராஜ்யம் கொடுக்கப்பட்டுவிட்டால், எப்படி வாழ்வது, எங்கேயிருந்து பணம் சேகரிப்பது என்று தெரியும்" என்பதாக. அதையேதானும், பிறருக்குத் திருப்பிச் சொல்லுவதாக, ஒருநூலிலிருந்து பந்த் கூறியதைப் படித்துக் காட்டித் தெரிவித்தார்! "கனவு, என்று கருதாதீர். ஜின்னா, பாகிஸ்தான் கேட்டபோது நேருவே சொன்னார்—ஒரு பத்தாண்டு காலம் போகட்டும். சுதந்திரம் நிலைத்த பிறகு, சரியான வழியில் பிரிந்து போகலாம், என்று. அதையே, நான் இன்று நினைவூட்டுகிறேன், வேறொன்றுமல்ல" என்பதாக! யாரையும் ஏசவில்லை — எவரையும் காயவில்லை" — "பாகல்மேடு, பாகல்மேடு" என்று பெரிதாக விளம்பரம் செய்யப்பட்டதல்லவா? காமராசரே நேரில் போய் குறைகளை அப்போதைக்கப்போதே 'பைசல்' செய்வதாக! அந்தப் "பாகல்மேடு" ஏன் தொடர்ந்து நடைபெறவில்லை, என்று சி. என். ஏ. கேட்டுவிட்டு, "நான்கூடப்பேராசைப்பட்டு எனது தொகுதி மக்களுக்கு ஏதாவது கிடைக்கட்டுமே என்று முதலமைச்சரைத் தண்டலம் எனும்கிராமத்தில் ஒரு மாநாடு கூட்டி அழைத்துச் சென்றேன். மகஜர்கள் ஏராளம் தரப்பட்டன. பயனோ, இதுவரையிலும் இல்லை!!" என்று கூறியபோது, காமராசர் இடைமறித்து, "என்னை ஏமாற்றுவதற்காகக் கூட்டிப் போனீர்கள்?" என்க, அப்போது மட்டும் சி. என். ஏ., ஆத்திரத்தோடு காமராசர் இருந்த பக்கம் திரும்பி, "யாரை ஏமாற்றவேண்டும் நான்? எதற்காக ஏமாற்றவேண்டும்? ஏமாற்றி, உங்களிடம் லைசென்ஸ் பெற விரும்பினேனா—இல்லை, 'பெர்மிட்' கேட்டேனா? எல்லோரையும்போல என் தொகுதி மக்களும் வரி கொடுக்கிறார்கள். அதனால், அவர்களுக்கும் நன்மைகள் செய்து தருமாறு கோரத்தானே அழைத்துச் சென்றேன்!" என்று கூறியபோதுதான், ஆத்திரம் சிறிது தெரிந்ததே ஒழிய, மீதி நேரமெல்லாம், அமைதியோடு—அன்போடு — ஆதாரங்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துத் தந்தபடி பேசினார்!!

ஆனால்! ஆனால்!!

இந்தக் கூற்றுகளுக்குப் பதிலளிக்கப்போவதாகத்தான், வெளியிட்டார் சுப்பிரமணியம். மறுப்பார் — ஆதாரங்களைக் கொட்டுவார்—வரி இனங்கள் டில்லிக்குப் போகவில்லை என்று சொல்வார்— பக்ராநங்கல், வடக்கே இல்லை; தெற்கே கூவத்துக்கருகிலன்றோ இருக்கிறது என்று நிரூபிப்பார் — பந்தும்,

ஓநாயும் ஆட்டுக்குட்டியும்!

நீர் அருந்திக் கொண்டிருந்தது அந்த ஆட்டுக்குட்டி.

அதைப் பார்த்த ஓநாய்க்கு எப்படியாவது அதை அடித்துத் தின்னவேண்டுமெனும் ஆசை வந்தது.

வம்புக்கிழுத்து சண்டைபோட ஏதாவது காரணம் வேண்டுமே? ஆட்டுக் குட்டியோ, யாருடைய தீங்குக்கும் போகாது! அவ்வளவு சாது!!

ஓநாய், அதனிடம் போயிற்று.

"ஏ! ஆட்டுக்குட்டி, நான் தண்ணீர் குடிப்பதுதெரிந்தும், நீ கலக்கிவிடுகிறாயே—என்ன தைரியம் உனக்கு?", என்றது ஓநாய்.

"ஓநாயாரே! ஆறோ, மேற்கிலிருந்து கிழக்கே ஓடுகிறது. நானோ கிழக்கே நீர் குடிக்கிறேன்! நீர் மேற்கேயிருக்கிறீர்!! எப்படி நான் நீர் குடிக்கிற தண்ணீரை நான் கலக்க முடியும்?", என்றது அந்த ஆட்டுக்குட்டி.

உண்மையும் அதுதான்; நேர்மையான இந்தப் பதிலுக்கு என்ன மறுமொழி சொல்வது? சிறிது நேரம் யோசித்தது. எப்படியும், அதன்மேல் பாய்ந்தாக வேண்டுமே. அதனால்,

"நீ கலக்காவிட்டாலும், உன் பாட்டன் முப்பாட்டனார் கலக்கிவிட்டிருப்பார்களல்லவா? அதனால் வா, சண்டைக்கு!" என்று இழுத்தது.

பண்டித நேருவும் கூறியதாக அண்ணாதுரை சொன்னது பொய்யென்று விளக்குவார் — மிளகும் முந்திரியும், தோலும் காப்பியும், தென்னாட்டில் கிடையாது என்று ஆதாரங்களைச் செப்புவார்—நாமக்கல் கவிஞரை அழைத்துவந்து அப்படித்தான் பாடவில்லையென்று மறுத்துக் கூறி நமது வாயை அடைப்பார்— அதற்காகத்தான், பேச எழுந்திருக்கிறார்! பேசுமுன், தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "அண்ணாதுரை பேசாவிடினும் இதைப்பற்றிப் பேசுவதாகத்தான் இருந்தேன்" என்று ஆரம்பிக்கிறார் — என்று என்னவெல்லாமோ எண்ணினோம்!!

ஆனால்,

ஆனால்,

ஆனால்,

நிதியமைச்சர், ஓட்டைப்படகானார்; சரக்கிலாதபாண்டமானார்; எழுத்தில்லா ஏடானார்! அவர் எடுத்துக்கொண்ட வழக்கில் உண்மைகள் இல்லாமையினாலே, வாதாட இயலாது, வசைபாடும் கட்டம் சென்றார். தூற்றல் புராணம் படிக்கலானார்! அதையாவது, சரியான பீடத்தின்மீது இருந்து கொண்டு செய்தாரோ எனின், அந்தோ பரிதாபம், சாயந்து போன பீடம் அது!!

1929

1944

1948

என்று ஆண்டுகளை விவரித்தார் —"அகோவாரும் சட்டசபை உறுப்பினர்களே, இந்த தி. மு. க. இயக்கம் எப்போது உதித்தது தெரியுமா? 1929-ல்! அப்போது, இது சுயமரியாதை இயக்கமாக இருந்தது. 1944-ல் சேலத்தில் இது, தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் என்று இருந்த பெயரை மாற்றிக்கொண்டு, திராவிடர் கழகமாக ஆயிற்று. அப்போது, தளபதியார் கட்சிக்குள் புகுந்திருந்த காலம். அதுசமயம் அவர் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானம் என்ன தெரியுமா? இலண்டனின் நேரான பார்வைக்குக் கட்டுப்பட்டு, திராவிடநாடு வேண்டும் என்கிற தீர்மானம்! வெள்ளையனை விரட்டிவிட்டு, சுயராஜ்யம் கேட்டபோது, இப்படித் தீர்மானம் போட்டகட்சி, இது. இப்படி வெள்ளைக்காரனுக்குத் தாசனாயிருந்தவர்கள்தான் இந்த தி. மு. க-க்கள்! அது மட்டுமா, சட்டசபை உறுப்பினர்களே, இந்தக் கட்சியின் மாநாடு ஒன்று 1948-ல் தூத்துக்குடியில் நடந்தது. இந்த மாநாட்டில் என்ன தீர்மானம் போட்டார்கள் தெரிமா? ஐயகோ! பொதுப் பணத்தை எடுத்து கல்வி வளரும் கல்லூரிகளுக்குச் செலவிடக் கூடாது என்றார்கள். அப்படித் தீர்மானம் போட்டவர்தான் இந்த அண்ணாதுரை.

வெள்ளையனை வெளியேபோகக் கூடாது என்ற கட்சி தி. மு. க.

கல்விக்குப் பொதுப் பணத்தைச் செலவழிக்கக் கூடாதென்ற கட்சி தி. மு. க.

இப்படிப்பட்ட பிற்போக்குக் கட்சியிலா நாம் சேரமுடியும்? ஐயோ! ஐயோ!! ஆகுமா— இயலுமா—முடியுமா......" என்று இப்படிப் பேசியிருக்கிறார்!!

பதிலா, இது?

சி. என். ஏ. தான் கோரும் நாட்டுப் பிரிவினைக்கான ஆதாரங்களை எடுத்து அடுக்கடுக்காக வைத்தார். அவைகளில்,

எல்லாவற்றிற்கு இல்லாவிட்டாலும் ஒன்றுக்குக் கூட!!

பதிலளிக்கவில்லை, நிதியமைச்சர். மாறாக, நமது கழக வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தார்! எவ்வளவோ சுவையும் சோகமும் நிரம்பிய அந்த வரலாற்றையாவது சொன்னாரா எனின், அதுவுமில்லை!! 1929-ல் துவங்கி — சேலத்தை இழுத்து—தூத்துக்குடியைக் காட்டி, முடித்துவிட்டார். 1929 செங்கற்பட்டில் முதலாவது சுயமரியாதை மாநாடு நடந்தபோது, இன்றுள்ள தி. மு. க. வாலிபர்களில் பலர் 'கருவிலே'யிருந்திருப்பார்கள்-நமது பொதுச் செயலாளர் நாவலர் 'அனா ஆவன்னா' படித்துக் கொண்டிருந்திருக்கக்கூடும் — துணைச் செயலாளர் நடராசனோ, கடந்த 1938 வரையில் காங்கிரசில் இருந்தவர்—அன்பழகன், கருணாநிதி, மதியழகன், சம்பத், வில்லாளன், செழியன், போன்றோர் பிறக்காத காலம். ஆயினும், நாம் சார்ந்திருக்கிற இந்த இயக்கத்துக்கு முன்னோடி, அது என்பதை நாம் மறப்பதற்கில்லை. சுயமரியாதை இயக்கமாகவும், ஐஸ்டிஸ் கட்சியாகவும் இருந்ததை "சேலம்" செய்தது யார், என்பதை நாம் நன்றாக அறிவோம். கழகம் தோன்றிய அந்த ரசமான கட்டத்தை, நமது வரலாற்றின் பொன்னேடெனக் கருதுகிறோம் நாம்! அதுவரையில் சீமான்களும் செல்வர்களும், சிற்றரசர்களும் . செட்டிநாட்டரசும், மிட்டாவும் மிராசுகளும் கூடியுலாவும் கட்சியாகஇருந்ததைக்குடிசை நோக்கி சேலத்தில்தான் இழுத்து வரப்பட்டது!! பிரிட்டிஷ்காரன் தந்த 'சர்'ஐயும், 'திவான்பகதூரை'யும் வீசியெறியச் சொன்னது, அண்ணாதுரையின் தீர்மானம். ஏதோ என்றிருந்த இயக்கத்திற்கு, விடுதலைப் பாதையினைக் காட்டியது சேலம்! மிரண்டு ஓடினர் சீமான்கள் — பொப்பிலியும் பனகலும், சர். ஆர். கே. சண்முகமும், குமாரராசா முத்தையாவும் இன்னபிறரும் "ஏப்பா! இங்கேயும் புரட்சி வாடை புகுந்துவிட்டதே!" என்று இங்கு இடம் கிடைக்காதென ஓடிய கால மாறுதலை உண்டாக்கியது சேலம். அந்தச் சேலத்தைக் கேலி செய்கிறார், நிதியமைச்சர்! அதுவும், தீர்மானம் முழுதினையும் படித்துக் காட்டிப் பிறகு கேலி செய்தாரோ எனின் அப்படியல்ல...பிரிட்டிஷாரின் நேரான பார்வையிலேயே திராவிட நாடு அமையவேண்டும்...என்பதுவரையில் எடுத்துக்கொண்டு, நம்மையெல்லாம் வெள்ளைக்காரத்தாசர்களென்கிறார்!

'உன் கதை என்ன?'

வெள்ளையனுக்கு இன்று நாம் தாசர்களா இருக்கிறோமோ, நாம்தான் ஆண்டுக்கு நாலு தடவை ஆங்கில நாட்டிற்குப் போய் மவுண்ட்பாட்டனுடனும் மகாப் பிரபுக்களுடனும் குலவுகிறோமோ, காமன்வெல்த் எனும்

தொடர்பை வைத்துக்கொண்டு 'இந்தியா சுதந்திரம் பெற்றிருந்தாலும், எமது அரசி இராணி எலிசபெத்துத்தான்' என்று ஒப்புக்கொண்டிருக்கிறோமா, என்பது ஒருபுறமிருக்க, சேலத்தில் அத்தீர்மானம் போட்ட நேரம் எப்படி? ஜின்னா பாகிஸ்தான் கேட்டுக்கொண்டிருந்த நேரம்! காந்தியடிகள் கோரிய சுயராஜ்யம் கிடைக்காத நேரம்!! என்ன முடிவில், இந்தியா கொண்டுபோகப்படுமோ என்று யாரும் கருதாத சமயம், அது. அப்போது, நாம் அப்படித் தீர்மானம் போட்டதில் என்ன தவறு? வெகுதூரத்திலிருப்பவனுடைய தொடர்பு இருந்தால், ஒரு நாளைக்கு அவன் அந்நியன் என்று சொல்லித் தொடர்பை அறுத்துக்கொள்ள முடியும்? அவன் உண்டாக்கித் தந்த ஏக இந்தியா எனும் மாயவலையில் மாட்டவைத்து, 'இந்தியர்' எனும் போதைப் பொருளை ஊட்டுவோரின் அடிமைகளாக்கி விட்டால், திராவிட நாட்டின் விடுதலை எளிதல்ல—என்று கருதியதில் என்ன தவறு? அன்றிருந்த சூழ்நிலை அப்படி! அதனால் அப்படித் தீர்மானம் போட்டோம்! என்ன தவறு இதில்? இன்று எங்கள் காங்கிரஸ் என்று கூறுகிறார்களே, இந்தக் காங்கிரஸ் கட்சியையே நிறுவியது யார்? ஹ்யூம் என்கிற வெள்ளையன்தானே! கட்சியை நிறுவியது மட்டுமா, இந்தியாவின் தேசிய கீதம் என்று சொல்லப்படும் "ஜன கண மன" எனும் தாகூரின் பாடலுக்கு மெட்டுக்கட்டி இசையமைப்பு அளித்தது யார்? ஹெர்பர்ட் ஜான் முரீல் எனும் ஆங்கிலேயர்தானே!! (1952 செப். 4-ந் தேதி 'இந்து' 6-ம் பக்கம்) வெள்ளையன் தொடர்பு இருந்தது என்பதற்காக விட்டா விட்டனர், இந்தக் கீதத்தை? அது மட்டுமா'

காங்கிரசின் ஆரம்ப கால கோரிக்கையே, இந்திய மக்களாகிய எங்களுக்கு, அளிக்கப்படும் உத்தியோகங்களில் போதிய பிரதிநிதித்வம் வேண்டுமென்று, மாட்சிமை தங்கிய மன்னர்பிரானைக் கேட்டுக்கொள்ளுகிறது.

என்பதுதானே! ஆரம்பம் அப்படியிருந்தது — காலம் செல்லச் செல்ல, கருத்தலைகளும், புது இரத்தமும் பரவி, காங்கிரஸ், விடுதலை இயக்கமாக மாறிற்று! அதுபோல, ஒருபோது சீமான்களின் கூடமாகவும், ஜரிகைக் குல்லாய்களின் ஒய்வுமடமாகவும், வெள்ளையர் தாசர்களின் வேட்டைக் களமாகவும் விளங்கிய கட்சி இன்று, விடுதலை இயக்கமாக வந்திருக்கிறது!! என்ன தவறு இதில்? இன்னும் சொல்லவேண்டுமானால் யாரார், தேவையற்றவர்கள் — செல்லாக் காசுகள்—காளான்கள்—வௌவால்கள் என்று கருதினோமோ அத்தனை பேரையும் இழுத்துவைத்து இன்று காங்கிரஸ்தான் கொஞ்சுகிறது! நாமல்லவே!!

இருந்தும், பேசிப்பேசி, மக்களும் "தூ! தூ!!" துப்பிவிட்ட ஒரு செய்தியைப்பதிலாக்க முயன்றார், சுப்பிரமணியம். சி. என். ஏ. விடுத்த கேள்விகளுக்கு விடைவா, இது!!

தூத்துக்குடி மாநாட்டில் கல்லூரிக் கல்விக்குப் பொதுப்பணம் செலவழிக்கக் கூடாதெனத் தீர்மானம் போட்டோமாம் — அம்மாநாட்டுக்கு முன்புதான், "ஆகஸ்டு 15" எழுதப்பட்டதும், அம்மாநாடே சி. என். ஏ. இல்லாமல் நடந்ததென்பதும், அமைச்சர் புரிந்துகொண்டு இருக்க வேண்டாமா? கழகத்தில் அதுபோது இருந்தோமென்பதால், பொறுப்பை ஏற்றுக்கொள்வோம்.

அப்படி அப்போது தீர்மானம் போட்டோம்.

இப்போது, அத்தீர்மானம் தவறு என ஒப்புக்கொள்ளுகிறோம்.

இதற்கென்ன சொல்லுவார் அமைச்சர்? கல்லூரி வேண்டாமென்று தி. மு. க.வா சொல்லும்?

காஞ்சி கல்லூரி

சென்னை தியாகராயர் கல்லூரி

போன்றவைகளுக்கு வாயிருந்தால், ஓங்கி எழுப்பியிருக்கும் கட்டிடத்தின் ஒவ்வொரு கல்லும் கவிபாடிச் சொல்லுமே, அவை எழும்ப தி. மு. க. செய்துள்ள காணிக்கையை! இருந்தும், தி. மு. க. மீது பழிபோட முயல்கிறார், அமைச்சர்!!

தி. மு. க.

ஒரு வேடிக்கை—அவர் நமது வரலாற்றைச்சொல்வதாகத் துவங்கி, தூத்துக்குடி வரையில் சென்று திடீரென முடித்துவிட்டார். அது வரையில், தி. மு. க. என்கிற நூலின் முன்னுரைதானே ஒழிய, வரலாறு ஆரம்பித்ததே பிறகுதான்! தி. மு. க. அரும்பியதே பிறகுதான்!

அதற்குப்பிறகுள்ள சரிதத்தை அவர் சொல்லியிருந்தால், அது **நேர்மை; நாணயம்; ஒழுங்கு.** அமைச்சர், அந்தக்கட்டத்துக்கே போகவில்லை! தறியாளர் தம் கண்ணீர் துடைத்ததும், மூட்டை தூக்கி விற்றதும், புயல் அடித்த பக்கமெலாம் ஓடியதும், பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் சச்சரவு தீர முயலுவது பற்றியெல்லாம் சொல்ல நேருமே! அது அங்கேயிருக்கும் காங்கிரஸ் எம். எல். ஏ-க்களோடு தன்னையும் ஒரு தி. மு. க-வாக ஆக்கிவிட்டால் என்ன செய்வது என்கிற அச்சமோ என்னவோ, அமைச்சர் திராவிடகழக வரலாற்றைச் சொல்லி தி. மு. க. வரலாறு என்று முடித்துவிட்டார்! அதிலும் ஒரு விந்தை,

திருமணம்

2—3—58ல் சோளிங்கபுரத்தில் க. அன்பழகன், எம். ஏ; எம். எல். ஏ. தலைமையில் இலக்குமி — சுப்பிரமணியம் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதைப் பாராட்டி தோழர்கள் அரங்கண்ணல், மணி, சம்பந்தம் ஆகியோர் வாழ்த்துகள் வழங்கினர்.

எங்தெந்த நிகழ்ச்சிகளை முக்கிய மானதென அமைச்சர் கூறினாரோ, அவைகளையெல்லாம் "உண்டாக்கின" பெரியார் அவர்களின் சேவடியே சரணம் எனத் தேர்தலின்போது ஓடி விழுந்துவிட்டு, இன்று அவரையே ஏசிப் பேசுகிற விந்தைதான்!!

அமைச்சர் இப்படியெல்லாம் அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிக்க இடிக்க, நமக்குப் பரிதாபமும் பாசமுமே அதிகமாயிற்று. வழக்காட வந்தால், அது அழகு! மீண்டும் மீண்டும் வம்புக்கா வரவேண்டும்!!

அமைச்சர் பேசப் பேச காங்கிரஸ் எம். எல். ஏ. - க்களில் சிலர் அவருக்கு மென்மேலும் உற்சாகமூட்டியபடியே இருந்தார்கள். பாபம்! அவர்கள் மறந்துவிட்டார்கள்—ஒருபோது, தீண்டத் தகாதெனச் சொல்லப்பட்ட கழகத்தைப் பற்றி, சட்டசபையில்நீண்ட உரை நிகழ்த்தவேண்டிய அவசியம் வந்திருக்கிறதென்பதை!!

உண்மையில், கழக வரலாற்றில் இதுவும் ஒரு முக்கிய சம்பவம். அறிந்தோ, அறியாமலோ அமைச்சர் சுப்பிரமணியம் ஆண்டுக்கு ஒரு நன்மை செய்து வருகிறார். கடந்த ஆண்டு நம்மைப் பார்த்து, "பத்தாண்டு ஒப்பந்தம்" கேட்டார்! இந்த ஆண்டு, "நமது வரலாறையே," எல்லோருக்கும் சொல்ல ஆரம்பிக்கும் கட்டத்துக்கு வந்திருக்கிறார். அதன் மூலம், நாட்டுப் பிரிவினைக்காக நாம் வழங்கும் ஆதாரங்களுக்குப் பதிலளிக்க இயலாது என்பதை வெட்ட வெளிச்சமாக்கி யிருக்கிறார்!!

இப்படியே, ஒவ்வொரு தடவையும் அவர் செய்வாரேயானால், கேளாத செவியெல்லாம் நம்மைப் பற்றிக் கேட்கும்; புகாத மனமெல்லாம் புகும்; அடுத்த பொதுத் தேர்தலுக்குள் "எங்கும் நிறை நாதப் பிரம்மம்", என்றழைக்கும் கட்டத்துக்கு தி. மு. க. வந்துவிடும்.—ஆகவே, சட்ட சபையில், இரண்டு மணிநேரம் தி. மு. க. வைப்பற்றிப் பேசியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வோம்!!

★

எதிர்ப்பு ஒரு சிறப்பு!

—[கோபி. கலிங்கன்]—

"உணர்ச்சியை உறுஞ்சும் பனி! ஆர்ப்பரிக்கும் கடல்! இடி மழையால் மிரட்டும் வான்! - பலமிகுந்த வீரனையும் காய்ந்த சருகாக்கும் இயற்கையின் கோர விளையாட்டிற்கிடையே...மனித குலத்தின் சிறப்புக்காக, எனது இலட்சியமெனும் மாமருந்தாகிய "சமுதாய ஒப்பந்தத்தை" எனது குருதி கொண்டு தீட்டினேன்! இதற்கா எதிர்ப்புக் குரல் எழுப்பி அனல் மூட்டுகிறீர்கள்? வேண்டாம்...! ஏகாதிபத்ய வாதிகளே! என்னைப் பொசுக்குங்கள்! இந்த 'ரூசோ'வை உங்கள் உல்லாசத்திற்காகப் பலியிடுங்கள்! எனது நூலை மட்டும் எரிக்க வேண்டாம்!"

ரூசோ மன்றாடினான். ஆதிக்கபுரியினரால் 'சமுதாய ஒப்பந்த' மெனும் ஏடு தீக்-குண்டத்தில் வீசப்பட்டது! மக்கள் மயக்கம் தெளிந்தனர். எதிர்ப்பு மறைந்தது இன்று ரூசோவின் சிறப்பு வையமெல்லாம் விரிந்தது!

*

"தோழர்களே! வருங்கால வீர மக்களே! இல்லாததை எண்ணியெண்ணி வாடவேண்டாம். கண்ணால்கண்டதைபகுத்தறிவுஎன்னும் துலாக்கோலால் எடை போட்டு, நல்ல வழியில் செல்ல வேண்டுமானால்...சிந்தியுங்கள்! நன்றாகச் சிந்தனை செய்யுங்கள்!" என்றான் சிந்தனைச் செம்மல், "சாக்ரடீஸ்"! அது கேட்டு கிரேக்க சட்டமன்றம் சீறியது! எதிர்ப்புக் காட்டி நஞ்சூட்டியது! அதன் எதிரொலி... அவனி யெல்லாம் முழங்கியது! பலன் சிறப்பேற்பட்டது! சாக்ரடீஸின் கொள்கை உலகமெல்லாம் ஒளி விட்டது!

*

அரசு, அதிகாரம், ஆடம்பரம், அரண்மனை வாழ்வு எல்லாவற்றையும் மறந்து துறவு பூண்டான் சித்தார்த்தன்! மாநிலத்தின் உயிர்களெல்லாம் நம்மைப் போன்றவையே, ஆடு மாடுகளை வேள்வியின் பெயரால் பலியிடுவது அறியாமை! கொல்லாமை விரதம் கொள்ளுங்கள்! அன்பைக் கடைப்பிடியுங்கள்! என்று சொன்னான். வைதீகம் கொக்கரித்தது! துன்புறுத்தியது! எதிர்த்தது! எதிர்ப்பு— சித்தார்த்தனைப் புனிதனாக்கியது! புத்தனென்று சிறப்பித்தது.

*

"எம்மதமும் சம்மதம்! மனித குலத்தில் உயர்வு தாழ்வு கற்பிப்பது பேதைமை! அதற்கு முதல் மருந்து தீண்டாமையை ஒழிப்பது என்றார் காந்தியடிகள். வெற்றி மலரும் வேளை, மலர் கசக்கப்பட்டது! எதிர்ப்பு அவ்வரை மகாத்மாவாக்கியது! எதிர்ப்பு சிறப்பாகி, உத்தமரை வாழ்த்தியது!

*

நாவாய்களை நடுங்கச் செய்யும் சுறாவும், ஓயாமல் புண்பட்ட உள்ளங்களைப் போல் துடிக்கும் அலைகளும்...தென்றல் புயலாவது போல் கொந்தளிக்கும் கடலும்... முத்துக் குளிக்கும் மறவனை மிரட்டுவது போல் எதிர்க்கிறது... இயற்கை! அதைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல் தனது இலட்சியத்தை அடைகிறான் தமிழ் மறவன்! அங்கே எதிர்ப்புத்தான் சிறப்புக் கொடுக்கிறது!

எதிர்ப்பென்பது உண்மையை வெளிப்படுத்தும் கதிரவனைப் போன்றது. பொறாமை, வெறுப்பு, ஆதிக்கம், அடக்குமுறை ஆகியவைகளால் இக்கதிரவனை மறைக்க முடியாது.

★

இதுதான் சட்டசபை!

நமது தனி நிருபர்

மூன்று நிருபர்கள் வந்திருக்கிறோம் என்று சொன்னார் அவர்! என்னய்யா, சட்டசபைக் கூட்ட நிகழ்ச்சிகளை எழுத ஒரு பத்திரிகையிலிருந்து மூன்று நிருபரா—என்று கேட்டேன், நான்!

சட்டசபைக் கூட்டங்கள், இதற்குமுன் நடந்தபோது, அடிக்கடி நான் போயிருக்கிறேன். அப்போதெல்லாம் இல்லாத ஒரு ஆர்வமும் பரபரப்பும், கடந்த ஓராண்டாக, எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஏடுகள், சட்டசபைப் பேச்சுகளை உடனுக்குடனே போட, ஆசைப்படுகின்றன. மக்களும், பேரார்வம் காட்டுகிறார்கள்.

நிருபர், என்னைப் பார்த்துச் சிரித்தார். தேசிய ஏட்டின் நிருபர்தான் அவர். 'தேசியம்' என்பதற்காகத் தோழமையையும் பெருந்தன்மையையும் பறிகொடுக்காதவர், அவர். "உண்மையைச் சொல்லுகிறேன் அண்ணல்! முன்பெல்லாம் சட்டசபைக்குப் போவதென்றால், யார் போவது என்று சலிப்பாகக்கூட இருக்கும். உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாமல் எழுதிக்கொண்டே இருப்பதென்பது பெரிய தலைவலி! அதனால் யார் போவது என்று ஒவ்வொருவரும் யோசிப்போம். இப்போதோ, நீ நான் என்று எங்களுக்குள்ளேயே போட்டியிருக்கிறது. அதிலும் உங்கள் தலைவர் பேசுகிற தினத்தில், எல்லா நிருபர்களுமே வரவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். அதனால், மூன்று பேர் வந்திருக்கிறோம்," என்று சொல்லிவிட்டு, என்னைப் பார்த்துச் சிரித்தார்.

தி. மு. க. சட்டசபைக்குள் சென்ற பிறகு, தமிழ் மணக்கிறது என்று சென்ற ஆண்டு ஆனந்த விகடன் குறிப்பிட்டது பலருக்குக் கவனமிருக்கலாம். உண்மையில், தமிழ் மணக்கத்தான் செய்கிறது. நிதி நிலை அறிக்கை என்றால் 'நிதியாவது நிலையாவது' என்றுதானே கனம்கள் கேலி செய்வார்கள், முன்பெல்லாம். "பட்ஜட்" என்பதற்குப் பதில், தி. மு. க. வினர் குறிப்பிட்ட இச்சொல், எல்லோராலும் பயன் படுத்தப்படுகிறது. அமைச்சர்கள் கூட முன்னெச்சரிக்கையுடனேயே நல்ல தமிழில் பேச முயற்சி எடுத்துக்கொள்ளுகின்றனர். நிதி நிலை அறிக்கை, நிதிநிலை அறிக்கை என்று பல உறுப்பினர்கள் பேசியது, பெருமைக்குரியதாக இருந்தது!!

முன்பெல்லாம் சட்டசபைக்குள் போனால் "கோரம்" மட்டுமே இருக்கும். எத்தனை பேர் இருந்தால் சபை நடத்தலாம் என்று ஒரு விதி இருக்கிறதல்லவா? அந்தளவுக்கு மட்டுமே உறுப்பினர்கள் இருப்பார்கள்! அவர்களையும் விடாமல் பார்த்துக் கொள்ளும் வேலை, கட்சிக் "கொறடா"வுக்குத் தொடர்ந்து இருக்கும்! இப்போது அப்படியில்லை. அநேகமாக, சபையில் பல உறுப்பினர்கள் இருந்த வண்ணமே இருக்கிறார்கள். தி. மு. க. உறுப்பினர்கள், உட்கார்ந்திருக்கும் பக்கம் பார்த்தால்; பார்வையாளராகப் போயிருக்கும் நமக்கெல்லாம் ஒரு பெருமகிழ்ச்சியே காணக் கிடைக்கிறது! புன்முறுவலும், சுறுசுறுப்பும். பொதுப்பணியை இங்கும் ஆற்றுகிறோம் என்கிற ஒரு பெருமிதமும் தோன்ற அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். சட்டசபை நடைபெறும் ஒவ்வொரு நாளும் துவக்கத்தில் கேள்வி நேரம் இருக்கிறதல்லவா? சுவையான நேரம் அது! அமைச்சர்களைக் கேள்வி மேல் கேள்வி கேட்டு எதிர்க்கட்சியினர் 'அம்பு' பூட்டிடும் நேரம் அது! ஓமந்தூரார் ஆட்சிக் காலத்தில், முக்கிய எதிர்க் கட்சியாக விளங்கிய முஸ்லிம் லீகினர், அடிக்கடி துண்டுக் கேள்விகளைப் போடுவார்கள். ரசமாயிருக்கும்! கம்யூனிஸ்டுகள் முக்கிய எதிர்க்கட்சியினராக, போன தடவை விளங்கினார்களல்லவா? அவர்களும் பல துண்டுக் கேள்விகள் கேட்பதுண்டு! அது ஒரு மாதிரி. இப்போதோ கேள்வி நேரம், சுவையாயிருக்கிறது! சபைத் தலைவர் மட்டும் அனுமதித்துக் கொண்டேயிருந்தால், கேள்விகளாலேயே அமைச்சர்களைத் துரத்திவிடுவார்கள்போலிருக்கிறது!!

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம். எல். ஏ.க்களுக்கு, எதிர்க்கட்சியினருக்கு இருக்க வேண்டிய பொறுப்பு இல்லை. எனவே பொறுப்புடன் பேசவும், கேள்வி கேட்கவும் வேண்டிய அவசியமும் ஏது? அதனால், அவர்களில் பலருக்கு தூக்கம் வரும் நிலை ஏற்படத்தான் செய்யும்! அவர்களைப் பிழை சொல்வதற்கில்லை! ஒரே ஒரு சமயத்தில் மட்டும் அவர்கள் தங்களுக்கு 'டிக்கட்' கொடுத்த காங்கிரசுக்கு நன்றி காட்டத் தவறுவதில்லை. பேசும்போதும், சந்தர்ப்பம் கிடைக்கும்போதும், தி. மு. க.வைச் சர்க்கார் கட்சியாக நினைத்துக்கொண்டு, எதிர்க்கட்சியாகிவிடுகிறார்கள் அவர்கள்! எம். எல். ஏ.க்கள் மட்டுமா, சபைத் தலைவராக இருக்கும் சி. சுப்பிரமணியம்கூட அப்படித்தான்!

இந்தத்தடவை நிதிநிலை அறிக்கையின் கடைசி நாள் விவாதத்திற்கு அவர் பதிலளித்தார் அல்லவா? அதற்கு இரண்டு நாட்களுக்குமுன், நமது கழக நூல்களைத் தேடி, நிதியமைச்சரின் சகாக்கள் அலைந்ததாக ஒருவர்

சொன்னார்! "பண்ணைத்தோட்டம்" "இலட்சிய வரலாறு" முதலிய நூல்களைப் படித்து, நமக்குப் பதில் சொல்ல வேண்டுமென்றே நிதியமைச்சர் வந்திருந்தார். சபையில் பேசும்போதுகூட அவரே சொன்னார், இதனை. சொன்னது மட்டுமல்ல, "இலட்சிய வரலாறு" நூலையும் தமிழில் டைப் அடித்து கொண்டு வந்திருந்தார், அவர். சட்டசபையை, நமக்குப் பதிலளிக்கும் இடமாகப் பயன்படுத்தும் ஆசையே, காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கிறது! யார் பேசினாலும் சரி நம்மைப்பற்றிப் பேசாமலிருப்பதே இடையாது!! முன்பெல்லாம் வாய் திறக்கமாட்டார்கள் என்று இருந்த பெயர் மாறி, நாம்போன பிறகு நம்மைப்பற்றியாவது பேசுகிறார்களே என்பதற்காக நிச்சயம் அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

சில சமயங்களில் அவர்களது பேச்சு வரம்புமீறிய வகையில் போய்விடவும் நேருகிறது! நிதிநிலை அறிக்கைபற்றி, பதிலளித்துக்கொண்டே வந்த சி. சுப்ரமணியம், நமது வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தார். தேவையில்லாதது தான் அது! கம்யூனிஸ்டுகளுக்கு, "என்ன? தி. மு. க-வைப்பற்றியே பேசுகிறாரே! சுப்ரமணியத்துக்கும் தி. மு. க. தலைவர்களுக்கும் ஏதாவது ஒப்பந்தம் இருக்குமோ!!" என்று கூட நினைப்பு வந்திருக்கும். அந்தளவுக்கு, சட்டசபையை, பொதுமேடையாக ஆக்கிவிட்டார் நிதியமைச்சர். அது, சில காங்கிரஸ் எம். எல். ஏ-க்களுக்குக்கூட வேதனையாக இருந்திருக்கிறது அவர்போக்கு. வெளியில் நான் உட்கார்ந்திருந்த இடத்துக்கு, நிதியமைச்சர் உள்ளே பேசிக்கொண்டிருந்த நேரத்தில் விநாயகம் வந்தார்! தமிழரசைவிட்டு, தேர்தலின்போது காங்கிரசான விநாயகம்தான்!! நமக்கும் அவருக்குமிருந்த பழைய பாசத்தைக் காட்டுபவர்போல அருகில் வந்தார்—நிதியமைச்சர் மீது, ஆத்திரப்பட்டார். இதுவா, சட்டசபை? சட்டசபையைஇதற்கா பயன்படுத்துவது? — என்று என்னிடம் கேட்டார்! போய், நிதியமைச்சருக்குச் சொல்லுங்கள், என்றேன்!!

சேலத்தில் வெற்றிபெற்று வந்தாரே மாரியப்பன் எனும் காங்கிரஸ் உறுப்பினர் — அவர்போன்றோர் சந்தர்ப்பம்கிடைக்கும்போது, தாங்கள் காமராசரைத்திருப்திப்படுத்த வேண்டியவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளத் தவறுவதில்லை. அண்ணாவைப்பற்றி ஏதோ குறிப்பிடும்போது, "சாதியை ஒழிக்கும் காங்கிரஸ் கட்சி"யைச் சேர்ந்த அவர், "அண்ணாதுரை முதலியார்" என்று குறிப்பிட்டார்! ஐயோ பாவம், அவருடைய குரலை, யாருமே இலட்சியம் செய்யவில்லை!!

பொருளில்லாவிட்டாலும் நம்மைப் புண்படுத்தும் 'வெறி'யில் ஒரு சிலரும் — உண்மை கண்டவிடத்து ரசிக்கும் வேறு சிலரும் இருக்கிறார்கள் காங்கிரஸ் தரப்பில்! அண்ணா, பேசும்போது, "எதிர்க்கட்சியில்லையே, சரியான எதிர்க்கட்சியில்லையே என்று போகுமிடமெல்லாம் உள்நாட்டு அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் பேசிவருகிறார். அவர்கள் குறைபடுவதைப் பார்த்தால் அடுத்தத் தடவை, அவரே, எதிர்க்கட்சித் தலைவராக வந்துவிடுவார்போலிருக்கிறது" என்று குறிப்பிட்டார். சபை முழுவதும், நகைச்சுவையில் ஆழ்ந்தது. காங்கிரஸ் எம். எல். ஏ.க்களும்வாய்விட்டுச் சிரித்துவிட்டு உடனே சிரித்ததை, யாராவது பார்த்துவிட்டார்களோ என்று அவர்கள் இங்குமங்கும் திரும்பிப்பார்த்தது, பரிதாபமாயிருந்தது! இப்படி, அச்சத்துக்கும் ஆசைக்கும் ஆட்பட்டாலும், "என்னமோ காங்கிரசிலிருக்கிறோம்" என்றிருப்பவர்கள், இவர்கள். காங்கிரஸ் எம். எல். ஏ-க்களில் இவர்கள்தான் அதிகம் தென்படுகிறார்கள்.

சபையில், காமராசர் எப்படியிருக்கிறார் என்று அறிய பலருக்கு ஆசை ஏற்படக் கூடும். அவர் இருக்கிறார்! அவ்வளவுதான்!! அவருக்குப் பக்கத்தில் நிதியமைச்சர். அடுத்து, பக்தவத்சலம், அவருக்கடுத்து மாணிக்கவேலர்—கக்கன்—ராமையா -பிறகு லூர்து அம்மையார், இப்படி உட்கார்ந்திருக்கிறார்கள். நேர் எதிரில், எதிர்க் கட்சித் தலைவர்களிருக்கிறார்கள். காமராசருக்கு எதிரில், கா. சி. க. தலைவர் வி. கே. ராமசாமி, அவருக் கருகில் கா. சி. க. துணைத் தலைவர் டி. எஸ். ராமசாமி, அடுத்து அண்ணா, பக்கத்தில் நமது கோவிந்தசாமி, பிறகு கம்யூனிஸ்டுக் கட்சி கலியாணசுந்தரம், சோஷியலிஸ்டு பக்கிரிசாமியார், நல்லசிவம் முதலியோர் இருக்கிறார்கள். அண்ணாவுக்கு நேர் பின்னால், அன்பழகனும் எம். பி. சுப்ரமண்யமும் இருக்கிறார்கள். அதற்குப் பின்னால் கருணாநிதி, சத்தியவாணிமுத்து, ஆசைத்தம்பி, ப. உ. சண்முகம், எம். பி. சாரதி, நடராசன், செல்வராசு, [எஸ். எம். அண்ணாமலை, சந்தானம், இருசப்பன், ஆனந்தன் இப்படி உட்கார்ந்திருக்கிறார்கள்! நமது உறுப்பினர்கள் பேசும்போதுதான், மேலே மாடியில் உட்கார்ந்திருக்கும் பார்வையாளராகிய நமக்கு "கணீர்" என்று கேட்கிறது!! நிதியமைச்சர் சுப்ரமணியம் பேசும்போதும்தெளிவுடன் கேட்கிறது—அவர் நமது - உறுப்பினர்களைவிட "நன்றாக"ப் பேசவேண்டும் என்கிற முயற்சியில், இப்போது, தீவிரமாக ஈடுபட்டு வருகிறார் என்ற உணர்ச்சியே எனக்கு ஏற்பட்டது!!

சபையில், தகராறுக்குரிய இடங்கள் பல எழும்போதுகூட, நமது உறுப்பினர்கள் அதிகமான பொறுமையையே காட்டுகின்றனர். "மாற்றுக் கட்சியினருக்கு, நம்மவர்கள் காட்டுகிற மரியாதை அதிகம்தான்," என்று என்னோடு வந்த நண்பர் குறிப்பிட்டார்! "எத்தனை நாளைக்கு இவர்கள் எல்லாம் மாற்றுக் கட்சியிலேயே இருப்பார்கள். என்றாவது ஒருநாள், டில்லியின் போக்கை எதிர்த்து நமது பக்கம் வராமலா போகப் போகிறார்கள். அதனால்தான் இவ்வளவு பொறுமையும் கட்டுப்பாடும் நமது தரப்பில் தேவைப்படுகிறது," என்று நான் சொன்னேன். பதினைந்து பேர்கள் உள்ளே போனதற்கே, சபையில், பரபரப்பும் ஆர்வமும் எழும்பியிருக்கிறது — அமைச்சர் நமது நூல்களையெல்லாம் படிக்க ஆரம்பித்துவிட்டாரே — ஒரு 50 பேர் போயிருந்தால் எப்படியிருந்திருக்கும், என்று நினைத்தேன். என் கவனம், சட்டசபையை விட்டு, ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போயிற்று—நாம் சட்டசபையில் நுழையக்கூடாதெனத் தள்ளாத வயதிலும் ஓடி ஓடி காங்கிரசுக்கு உழைத்துவிட்டு, அதே காங்கிரசால் சிறைக்குள் அடைபட்டுக் கிடக்கும் பெரியாரின் நினைவு வந்தது! பெருமூச்சு விட்டுக்கொண்டு, கிளம்பினேன்!! ✱

வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு

[மா. கி. தசரதன்]

பக்கத்துத் தெருவில் ஏதோ திருமணம்போலிருக்கிறது. விடியற்காலை முதல் ஒலிபெருக்கி ஓசை — இசை — எல்லோரையும் எழுப்பிக் கொண்டிருந்தது. உறக்கம் கலைந்து எழலாமா வேண்டாமா என்று எண்ணிக் கிடந்த போது

வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு
பத்திரி ஏலம் கராம்பு

என்று சில சொற்கள் ஏதோ ஒரு வகை இசையோடு இணைந்து வந்து செவியில் நுழைந்தன. சிந்தனை அந்த வெற்றிலை பாக்கு சுண்ணாம்பையே சுற்றி வட்டமிட்டது.

நம்முடைய வாழ்க்கையில் இந்த மூன்று பொருள்களும் பெற்றிருக்கிற இடம் எவ்வளவு! சோறும் நீரும் இல்லாமல் இருந்தாலும் இவை இல்லாமல் முடியாத நிலை கூட வாய்க்கிறது! அறுசுவை உண்டியானாலும் அதற்குப் பின் இந்த நறுஞ்சுவைப் பொருள்களை நாடுகின்றோம்.

பக்கத்து வீட்டுத் திருமணத்திற்கு வரவேண்டும் வரவேண்டும் என்று அவர்கள் நேற்று 'வெற்றிலை பாக்கு வைத்து'த்தான் அழைத்தார்கள். அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு அங்கே போனால் 'வெற்றிலை பாக்கு' கொடுத்து மரியாதை செய்தனுப்புகிறார்கள். திருமணம் உறுதியானதே 'வெற்றிலை பாக்கு' மாற்றிக்கொண்ட பின்புதான். அந்தத் திருமணத்திற்குப் போகாதவர் யாரையாவது ஏன் போகவில்லை?' என்று கேட்டால் உடனே "அவன் என்ன என்னை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தது கெட்டுவிட்டது?" என்றுதான் தன் வெகுளியை வெளியிடுகிறார்.

திருமணம் ஆனபின் கணவன் மனைவி ஒருவர்க்கொருவர் வெற்றிலை பாக்கு பரிமாறிக்கொண்டு வாய் சிவந்துவிட்டதா என்று நாவை நீட்டி நீட்டிப் பார்த்துக் கொண்டு கொள்ளை ஆசை கொள்கிறார்கள். வாழ்வுக்குப் பின் சாவுக்குப் போனாலும் வெற்றிலையும் பாக்கும் இருக்கிறது.

'ஆற்றோரம் கொடிக்கால் அரும்பான வெற்றிலை, பேரட்டாசிவக்குதில்லே' என்று இசை பிறக்கிறது.

எங்கேயும் வெற்றிலையும் பாக்கும் இடம் பெற்றிருக்கிறது. இடம் பெற்றிருப்பதோடு மட்டுமா முதலிடம் அல்லவா பெற்றிருக்கிறது! அதற்கு முதலிடம் இருப்பதோடு அது யாருக்கு முதலில் தரப்படுகிறதோ அவர்களுக்கு அதிக 'மரியாதை' என்று எண்ணச் செய்கிறது. இந்த முதலிடம் அதற்கு எப்படி வந்தது?

அதன் பெயரிலே ஒன்றுமே சிறப்பைக் காணோம். வெற்றிலை—வெற்று இலை—வெறும் இலை—என்று அந்தச் சொல்லைப் பிரித்துச் சிதைத்துச் சின்னதாக்கி வெறும் இலை என்று அந்த இலையில் வெறுமையை ஊட்டிவிடுகின்றார்கள். ஆனாலும் அதன் பெருமை வெறுமையடையக் காணோம்!

வெறும் இலையை மெல்லும் வழக்கம் எப்போது தொடங்கியது என்பதை நிச்சயித்து உரைக்க இயலவில்லை. நினைவு தெரிந்த காலம் முதல் இந்த வழக்கம் இருந்தது என்று மட்டும்தான் தெரிகின்றது.

இலக்கியத்தில் எங்காவது இந்த இலை இருக்கிறதா என்று தேடிப் பார்த்தால் சிலப்பதிகாரம் தான் நமக்கு விடை சொல்லுகின்றது.

கோவலன் கைப்பொருள் இழந்து மனைவியுடன் மதுரைக்குச் சென்று அங்கு மாதரியின் இல்லத்தில் தங்கி இருக்கின்றான். மாதரி கொடுத்த பொருள்களைக் கொண்டு கண்ணகி நல்ல உணவு சமைத்து தலைவாழை இலையை அறுத்துப்போட்டு 'அமுதம் உண்க' என்று அருத்திய பிறகு அவனோடு பேசிக்கொண்டிருக்கின்றாள். பேசிக்கொண்டிருக்கும்போது கண்ணகி கோவலனுக்கு வெற்றிலையும் பாக்கும் கொடுத்தாள் என்று குறிக்கப் பெற்றுள்ளது.

'அம்மென் திரையல் ஒடு
அடைகாய் ஈத்த'

கண்ணகி என்று குறிக்கப் பெறுகின்றாள். அடையல் என்பது வெற்றிலைச் சுருள். பாக்குக்கு அடைகாய் என்ற பெயர் இன்றும் மலையாளத்தில் இருக்கிறது.

சிலப்பதிகார காலத்திலிருந்து வெற்றிலை சுவைக்கும் பழக்கம் இருந்து வருகின்றது. அவ்வளவு பழைய நாள் பழக்கமானாலும் இன்னும் அதில் புதுமை இருக்கத்தான் செய்கிறது.

புதுமை மட்டுமா இந்தக் காலத்தில் எந்த ஊரிலும் வெற்றிலை பாக்குக் கடை இல்லாமல் இருப்பதில்லை. வெற்றிலை பாக்குக் கடையில் பேசப்படாத செய்தியே கிடையாது. அரசியலானாலும் சரி அண்டை வீட்டுச் செய்தியானாலும் சரி வெற்றிலை பாக்குக் கடையில் வெளிப்பட்டே தீரும். அங்கு எல்லோரும் நண்பர்களாகிறார்கள்.

நமக்கு வெற்றிலையும் பாக்கும் நெடு நாள் பழக்கம். ஆனால் மேற்கு நாட்டவர்களுக்கு நம் மண்ணை மிதிக்குமுன் இந்தப் பெருஞ் சுவையைப்பற்றி ஒன்றும் தெரியாது.

ஆங்கிலேயர்களும் பிறரும் முதன் முதலில் இந்தப் பழக்கத்தைக் கண்டதும் வியப்படைந்து இதைத் தங்கள் குறிப்புகளில் எழுதிவைத்திருக்கின்றனர். விஜய நகர மன்னன் தன் படை வீரர்களில் விருது பெறும் விழுப்பம் உடையவர்களுக்குத் தானே வெற்றிலையும் பாக்கும் கொடுத்தான் என ஒரு குறிப்புக் காணப்படுகின்றது.

வெள்ளைக்காரர்கள் இங்கு வாணிபம் தொடங்கியபோது வெற்றிலை விற்பதனைத் தங்களுக்கு மட்டுமே உரிய தனி உரிமையாகப் பெற்றிருந்தனர் என்பதை அறிகின்றபோது வியப்படைகின்றோம்.

பழைய காலத்தில் யாராவது படிக்கப்போனால் அவன் ஏடுகளைத் தூக்கிக்கொண்டுவருவதற்காக ஒருவனை வைத்திருப்பார்களாம். அந்த ஏடுகளைத் தாங்கி இருக்கும் பலகை 'தூக்கு' என்றும் அதனைத் தூக்கிவருபவனைத் 'தூக்குத் தூக்கி' என்றும் அழைத்தனர் என்றும் சொல்வார்கள்.

அதைப்போல் சிற்றரசர்களுக்கும் பேரரசர்களுக்கும் வெற்றிலைப் பெட்டியை எடுத்து வருபவனை அடைப்பம் (வெற்றிலை பாக்குப்பை) தாங்கி என்று அழைத்தனர். பல அரசர்கள் அடைப்பந் தாங்கிஅரியணை ஏறினர் என்றும் வரலாறு கூறுகின்றது. தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களின் முதல்வன் அடைப்பம் தாங்கியதாக வரலாறு சொல்லுகின்றது.

வெறும் வெற்றிலை பாக்கு சுண்ணம்பு இவற்றோடு மட்டும் நிற்காமல் எத்தனையோ மணப்பொருள்களையும் சுவைப்பொருள்களையும் சேர்த்து வண்ணப் பொருள்களைக் கலந்து அழகாக மடித்து ஒழுங்காக அடுக்கி விற்பது இப்போது ஒரு கலையாக விளங்குகின்றது.

எதிலேயும் ஏதாவது நீதியைப் பெறவேண்டும் என்று எண்ணிய தமிழர்கள் வெற்றிலை பாக்கு போடுவதிலும் ஒரு உண்மையை உணர்த்துகின்றனர். 'ஆனைமேல் போகின்றவனிடம் சுண்ணம்பு கேட்பதுபோல்' என்று கூறுகின்றோம். எல்லாம் இருந்தும் முக்கியமான சுண்ணம்பு வேண்டுமானால் அது நம்மைப் போன்றவர்களிடம் தான் பெற வேண்டுமேயல்லாமல் அண்ணாந்து பார்த்துக்கொண்டு ஆனைமேல் போகின்றவனிடம் கேட்காதே என்று எச்சரித்தனர். இதிலே ஒரு சுவையான குறிப்பு கிடைக்கிறது ஒரு வரலாற்று நூலில்:

வெற்றிலை போடும் வழக்கம் தென்னிந்தியாவிலிருந்து தான் வட இந்தியாவிற்குப் பரவியதாம். இது, வெற்றிலைபாக்கு சுண்ணம்பு சேர்த்து மெல்வதால் பெறும் சுவையைவிடச் சுவையானது தானே நமக்கு!

★

முற்றுப்புள்ளிதானே!

—[சி. அ. செங்கோட்டையன்]—

வளங்கள் பலப்பல பெற்றநாடு, அசைவிலா ஊக்கமும் அழிவிலா உறுதியும் கொண்ட உழைப்பாளிகளை உடையதாய், உழைப்பால் வளங்களைப் பயன்படுத்திப் புலங்களைப் பண்படுத்திப் பலவகைத் திருவும் பெற்றுப் பாங்கான வாழ்க்கையைப் பண்புடன் நடாத்தும் மக்களைப் பெற்றுப் பொலிவுடன் திகழ்ந்த நாடு, மக்களை இழந்து, மாடு, மனைகளைப் பறிகொடுத்து, வளங்கள் வற்றிய நிலையிலே, கழனிகளெல்லாம் காடுகளாக, சோலைகளெல்லாம் பாலைகளாக மாறி—மரம், செடி கொடிகளெல்லாம் வெப்பம் தாங்காமல் பட்டுப்போய் வறட்சியடைந்து பாழ் நிலையில் கிடக்க, கடுமுட் செடிகள் கால்வைக்க முடியாத அளவுக்குப் பரவிப் படர்ந்திருக்க, நண்பகலில் நரிகள் இங்குமங்குமாகத் திரிந்து ஊளையிட்டுக் கொண்டிருக்க, சிறிது தொலைவிலிருந்து நெருப்பும், புகையும் சூழ்ந்து வந்து நாற்பக்கங்களிலும் சுற்றிக்கொண்டிருக்கும் கண்கொள்ளாக் காட்சியுடன் தோற்றமளிக்கிறது.

ஏன் இந்த நிலை? தண் கண்களும், மதமும் கொண்ட யானை, பகைவரை ஒடுக்கும், வில்வேற் போர்களில் நிகரற்ற வீரமும் பெற்ற கோதை (சேரன்) யின் செந்தாமரைக் கண்கள் சினத்தால் கோவைப் பழம் போல் சிவக்குமாறு செய்யப்பட்டன; சேரனின் சீற்றத்துக்காளான எந்த சிறுமதியாளனின் நாடும் மேலே விவரிக்கப்பட்டிருக்கும் சீரழிந்த நிலை அடைவது திண்ணம்; ஐயமில்லை என்பதை அழகாக எடுத்தியம்புகிறது. முத்தொள்ளாயிரப் பாக்களில் ஒன்று:-

கரி பரந்(து) எங்கும்
கடு முள்ளி பம்பி
நரி பரந்து நால்திசையுங்
கூடி—எரி பரந்த,
பைங்கண் மால் யானைப்
பகையடு தோள்க் கோதையைச்
செங்கண் சிவப்பித்தார்
நாடு.

அன்று ஆண்மையை, அறிவைத் துணைகொண்டு பெருமையின் பெட்டகமாய் ஆண்ட நம் நாடு—அறத்திற்கும் மறத்துக்கும் பிறப்பிடமாய்ப் பீடுநடைபோட்டு ஏறுபோல் அவனியிலே பவனி வந்த திருநாடு, இன்று கொடுமதி கொண்டோரால் சிறுமையுடன் ஆளப்படுகிறது.

நீர், நிலம், மொழி வளங்களைப் பெற்று வலிமைக்கோர் எடுத்துக்காட்டாகச் சீரும் சிறப்புமுற எடுப்பாக வாழ்ந்த நாம், சீரழிந்து சிந்தை நொந்து வறுமைக்கோர் எடுத்துக்காட்டாக, எடுப்பார் கைப்பாவையாய் வீழ்ந்து கிடக்கிறோம் இன்று.

தமிழ்மன்னர்களை இழித்துக்கூறிய கனக, விசயர்களாம் ஆரியர்களின் கொட்டத்தை அடக்கி — கர்வத்தை ஒடுக்கி,ஒழித்து நம்தாய்த்திருநாட்டின் இழிவு போக்கி, மானத்தைக் காத்த மறமன்னர் மரபில் தோன்றிய நாம், இன்று அவ்வற்பர்களின் வழித் தோன்றல்களின் 'பாதார விந்தங்'களில் நம் நாடு ஈட்டிய பொருள்களை வரிகளாகத் தலையிலே தாங்கமுடியாமல் தாங்கிச் சென்று மலையாகக் குவிக்கின்றோம். உருக்குலைய உழைத்து, உழைத்துப் பொருள் குவிக்கும் நாட்டில் வற்கடம் ஏற்பட உண்டு, உண்டு ஊதிக்கொழுக்கிறது உலுத்தர்களின் நாடு. சோலைகளும் பாலைகளாக்கப்படுகின்றன இங்கே—தெற்கே; இதற்கு முற்றிலும் மாறான நிலை அங்கே - வடக்கே.

ஈழத்தையும், கடாரத்தையும், பர்மாவையும் கடல் கடந்து சென்று—வென்று வாகைசூடி, வெற்றிக் கொடி நாட்டி — தமிழ்க் கொடி — திராவிடக்கொடி வானளாவப் பறக்

கத் தலைநிமிர்ந்து, இறுமாந்து இறும்பூதெய்தின நாம், இன்று தருக்கர்களின் தலைகீழ் ஆட்சிக்குத் தலைகுனிந்து, மாற்றுக் கொடி தலைக்குமேல் பறக்கத், தாழ்வுற்றுத் தளர்நடைபோடுகிறோம். அன்று பார்போற்ற வாழ்ந்த நாம், இன்று தூற்றப்படுகின்றோம் துடுக்குக் கொண்ட துட்டர்கள் சிலரால்.

நாளொன்றுக்கு மூன்று நூறாயிரங்கள் செலவழிக்கப்படுகின்றன வடநாட்டு அகதிகளுக்காக! 'பாக்' அகதிகளுக்காக!! ஆனால் வெளிநாடுகளிலிருந்து துரத்தப்பட்டுத் துடிதுடிக்க ஓடிவரும் தமிழர்களுக்கு—திராவிடர்களுக்குச் செலவிடப்படும் தொகை மூன்றாயிரமா? — இல்லை — மூன்று நூறா?—இல்லை—மூன்று ரூபாய்களா? —அதுவுமில்லை — மூன்று செப்புக் காசுகள்கூட இல்லை — சேமித்து வைக்கப்பட்டனவாம் அந்நிய அகதிகளுக்காக!!! என்னே கருணை இந்த கருணாமூர்த்திகளுக்கு!

தமிழர்களது இரத்தத்தையும், வியர்வையையும் குடித்துக் குடித்து ஏற்றம் பெற்ற நாடு—இலங்கைக் குடியரசு! இன்று இரக்கமின்றி, முரட்டுப் பண்பு நிறைந்ததாய்-இராவணனுக்கு—மலை குலுங்கினாலும் நிலை கலங்காத இலங்கை வேந்தனுக்கு இழுக்குத் தேடும் வகையில்—நன்றி மறந்து, சுகவாழ்வு கொடுத்தோரைச் சுட்டுக் கொல்லவும் திட்டம் தீட்டுகிறது. ஆனால் அந்தப் பரிதாபத்துக்குரியவர்களை—பராரிகளை — வறுமையாளர்களை வாவென்றழைத்து, வாழ வகை செய்யத் திட்டங்களையும் தீட்டாதிருக்கின்றது அவர்களை ஈன்றெடுத்த நாட்டின் ஆட்சி.

வானத்துக் கொப்ப வையகமிருக்க, வானத்து மீன்களைப்போல் நாடுகள் பல நானிலத்திலிருக்க, அவைகளுக்கிடையே தண்ணொளி பரப்பும் வெண்ணிலா வீற்றிருப்ப போல நம் தாயகம் - திராவிடம் மற்ற நாடுகளுக்கெல்லாம் முழுமதியாய் மங்காப் புகழொளி வீசித் திகழ்ந்தது அன்று; முதல் நிலாவுக்கு முன்னாள் போல இருளிலே மூழ்கிக் கிடக்கிறது இன்று. ஏன்?

புகழொளியிலே அழுக்காறு கொண்ட ஆரிய மாயை என்னும் கரியமேகம் ஒளித் திங்களை மறைத்தது; அதன் மங்கா ஒளி மங்கியது—ஆம், நம் திருவிடம் மாயையால் - சூழ்ச்சியால் பண்பையும், நாகரிகத்தையும், கலையையும், கலாசாரத்தையும் பறிகொடுத்துக் கலங்கியது--கலக்கத்தையே கையாறாகவும் கொண்டது. சூது அறியாது, தூய்மையையே—அறிவையே சொத்தாக்கித் திகழ்ந்த திருநாடு, சூழ்ச்சியால் பைய பைய ஆட்கொள்ளப்பட்டது.

நூற்றாண்டுகள் பல வேதனையுடன் நகர்ந்தன; வெள்ளையன் ஆட்சியாம் கார்முகில் படையெடுத்தது—முழுமதி முற்றிலும் மறைந்தது — இல்லை — மறைக்கப்பட்டது; தண்டமிழரசையுமிழந்து தவித்தது திராவிடம்.

கார்முகில் கலைந்தது; ஆனால் மீண்டும் ஓர் மேகம் விரைந்தது; மறைத்தது மதியை. வெள்ளையனிடமிருந்து அரசைக் கைப்பற்றிய — இல்லை - அவர்களாலேயே கொடுக்கப்பட்ட ஆட்சியை அடைந்த வடவரால் நம் உரிமை பறிக்கப்பட்டது; அடிமைகளாக்கப்பட்டோம் நாம்; மிடிமையின் பிடியில் சிக்குண்டு தவித்தோம்—தவிக்கிறோம் இன்றும். தென்னகப் புகழும் புதைக்கப்பட்டது—புதைக்கப்பட்டு வருகிறது வடக்கால். காரணம்? — அறியாமையோ, ஆணவமோ; பொச்சாப்போ பொறுமையோ; தெரிந்திலேம்.

இம்மட்டோ? உயர்தனிச் செம்மொழியாம் நம் தாய் மொழியை — சீரிளமைத் தமிழ் மொழியை, உலக வழக்கழிந்தொழிந்த எழுதாக் கிளவியின் தோன்றலாம் — பல மொழிகளின் கூட்டுத் தயாரிப்பாம் 'இந்தி' என்ற வேற்று மொழி துரத்தப் பார்க்கிறது, ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்தப் பார்ப்பது போல. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டு முயற்சிப்பதைப் பார்த்து அழுவதா—இல்லை—சிரிப்பதா என்ற பரிதாப உணர்ச்சிதான் உள்ளத்தே எழுகிறது. இல்லையா தோழர்களே?

கலையும் கலாசாரமும் இழந்தோம் மயக்கமூட்டப்பட்ட நிலையிலே — அரசுமிழந்தோம். அடக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் அறிவிழந்திருக்கையிலே—எஞ்சியிருந்த கன்னல் மொழியையும் கவர முயற்சிக்கிறது நஞ்சு மொழியால், வீழ்ச்சியடைந்த நாம் விழிப்புற்று வீறுகொண்டெழுந்து உரிமை முழக்க மிடுகையிலே.

ஆம்! நம் தி. மு. க. -வின் கட்டுக்கோப்பான கொள்கைகளிலே இந்தியத் துணைக்கண்டத்தின் மூலை முடுக்குகளும்—பட்டி தொட்டிகளும்; ஏன்! கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளும் காதைத் தீட்டிக்கொண்டு கவனம் செலுத்துகின்ற நிலையிலே; அவைகளின் கருத்துத் திண்மையிலே — தெளிவிலே திகைப்படைந்திருக்கின்ற தருணத்திலே—திராவிடச் செம்மல்கள் பலரைப் பலிகொடுத்து—குருதிக் காணிக்கையளித்து, அருவருப்பை, அதிருப்தியைக் காட்ட அறப்போர் பலவற்றை நடத்திக் காட்டியவர்களாக இருக்கிறோம்.

ஏ, தமிழகமே! எதிர்த்து வரும் ஈட்டிக்கு இமை கொட்டியவன் கோழை என இழித்துக் கூறினாய் அன்று. மாற்றானுக்கு மண்டியிட்டு, மாண்பிழந்து அவன் வீசி எறியும் எச்சில் துண்டுகளுக்குக் காத்துக் கொண்டிருக்கும் அவமானச் சின்னங்கள் சிலவற்றைத் தாங்கிக்கொண்டிருக்கின்றாய் இன்று. ஆனால் உம் பொறுமைக்கு எங்கே இருக்கிறது பெருமை, தாயே? இனி, பொங்கியெழுவதுதான் நீதி அன்னையே!

ஏ, திராவிட வீரர்களே! "புறமுதுகு காட்டாத முன்னோர்களுக்குப் புன்மை தேடிய புல்லர்கள்" என்று நம் பின்னோர்கள் நம்மை இழித்தும், பழித்தும் அறைந்திடும் ஆபத்தைப் போக்க வேண்டாமா? அவனி புகழ ஆண்ட அன்னை நாட்டை அந்நியர் ஆள அனுமதிப்பதா? பொன் விளையும் நாடு பொறுமைக்காரரால் சுரண்டப்படுவதா? அதைப் பார்த்துக் கொண்டே பொம்மைபோல் வாழ்வதா? வெள்ளிக் காசுகளை அள்ளி அள்ளிக் கொடுத்த நாடு, சல்லிக் காசுக்குக் காவடி எடுப்பதா? காவடி எடுத்தாலும் 'கை விரிப்பு' நடைபெற, கவனிப்பாரற்ற மூத்தாள் பிள்ளையின் அவல நிலை! இந்த மானமிழந்த தன்மை மண்ணோடு மடியவேண்டாமா?

ஆம்! தாய்த் திருநாட்டின் மாசு போக்கி, அயலாரின் அரசு நமக்குத் தூசு என்பதை நிலைநாட்ட—முகிலைக் கிழித்து முழுமதி தண்ணொளி பரப்பித் திகழ—நம் இன்பத் திராவிடம் இழந்த பெருமையை மீட்டு, இறுமாப்புடன் புகழொளி வீசிட-தாய் மொழி தழைத்தோங்கி, வகுப்பு வாதக் கொடுமை மங்கி மடிய, நம் நாட்டு வரலாற்று ஏட்டில் அந்நிய அரசு — 'வடவராதிக்கம்' என்ற தலைப்பில் அடங்கிய கட்டுரைக்கு காற்புள்ளி, அரைப்புள்ளி இரண்டும் வைக்கப்பட்டுவிட்டது நமது அறப்போர்களில் மாண்ட செயல் வீரர்களின் மறக் குருதியால்; நம் சட்ட மன்ற நுழைவும், 'சனவரி ஆறும்' முக்காற் புள்ளி இடும் பணியை நிறைவேற்றிவிட்டது.

தீரர் கோட்டமே! 'இனி முற்றுப் புள்ளிதானே' தேவை என்று திரும்பி விடாதீர்கள்! பண்பட்ட நாம் பணி புரிவோம். முன்னேறுவோம் முயற்சியோடு. முற்றுப்புள்ளி வைப்போம் அயலானும் வடவரின் ஆதிக்கத்திற்கு.

★

மார்ச்
14ல்
முதல்
புத்தா
பிக்சர்ஸ்
பதி பக்தி
சங்கீதம்: விஸ்வநாதன்-ராமமூர்த்தி • நிர்வாகம்: C.N. வேலுமணி
கதை வசனம்: M.S. சோலைமலை • காமிரா: G. விட்டல்ராவ்
A. பீம்சிங்
பூரண உரிமையாளர்
S.K. பிக்சர்ஸ்
BAKTHA